**வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் (பொ) செயல்முறைகள்**
**ந.க..எண்.3133/ஆ5/2025, நாள்.02/07/2025**

.....

பொருள் பள்ளிக் கல்வி – பள்ளி செயல்பாடுகள் – பள்ளி மாணவர்களிடையே சாதி மற்றும் சமூக வேறுபாடு உணர்வுகள், கருத்து வேறுபாடுகள் அடிப்படையில் வன்முறை உருவாகுவதைத் தவிர்க்கவும், நல்லிணக்கம் மற்றும் நற்பண்புகளை வளர்க்கவும் பின்பற்ற வேண்டிய வழிகாட்டு நெறிமுறைகள் வழங்குதல் – சார்பு

பார்வை 1. அரசாணை நிலை (1டி) எண். 83 பள்ளிக் கல்வித் துறை நாள். 17.06.2021
2. சென்னை –6, தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண்.53643/எம்1/இ1/2024, நாள். 25.06.2025

.....

பள்ளி மாணவர்களிடையே சாதி மற்றும் சமூக வேறுபாடு உணர்வுகள், கருத்து வேறுபாடுகள் அடிப்படையில் வன்முறை உருவாகுவதைத் தவிர்க்கவும் நல்லிணக்கம் மற்றும் நற்பண்புகள் வளர்ப்பது மிக இன்றியமையாதது. எனவே ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் பெற்றோர்களுடன் இணைந்து நல்லிணக்கத்தின் இலக்காக சாதி / சமூக வேறுபாடு இல்லாத சமூகத்தை உருவாக்குவதற்கு பின்பற்ற வேண்டிய வழிகாட்டுமுறைகள் பார்வை 2–ல் காணும் பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகளில் கீழ்கண்ட தலைப்புகளின் பெயரில் விரிவாக கொடுக்கப்பட்டுள்ளது.

1. நன்நெறி வகுப்பு
2. கல்வி சார் செயல்பாடுகள் (Co–Curricular)
3. கல்விசாராச் செயல்பாடுகள் (Extra Curricular Activities)
4. வழிகாட்டு நெறிமுறைகள்
5. மகிழ் முற்றம் – மாணவர் குழு கட்டமைப்பு
6. விளையாட்டு
7. சமூக ஊடகங்கள் பயன்பாடு
8. கண்காணிப்பு குழு

எனவே இணைக்கப்பட்டுள்ள பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகளில் கொடுக்கப்பட்டுள்ள வழிகாட்டுமுறைகளை கவனமாக பின்பற்றி பள்ளிகளில் செயல்படுத்த உரிய நடவடிக்கை மேற்கொள்ள அனைத்து வகை பள்ளித் தலைமையாசிரியர்கள் / தனியார் பள்ளி முதல்வர்களுக்கு அறிவுறுத்துமாறு மாவட்டக் கல்வி அலுவலர்களுக்கு (இடைநிலை / தொடக்கக் கல்வி / தனியார் பள்ளிகள்) தெரிவிக்கப்படுகிறது. மேலும் பள்ளிகளை பார்வையிடும் போது இப்பொருள் சார்பாக ஆய்வு செய்து அதன் அறிக்கையினை இவ்வலுவலகத்தில் சமர்பிக்க தெரிவிக்கப்படுகிறது.

இணைப்பு –
பார்வை 2ல் காணும் செயல்முறைகள்

முதன்மைக் கல்வி அலுவலர் (பொ),
வேலூர்.

பெறுநர் –
மாவட்டக் கல்வி அலுவலர்கள்,
(இடைநிலை / தொடக்கக் கல்வி / தனியார் பள்ளிகள்)
வேலூர் மாவட்டம். (இவ்வலுவலக மின்னஞ்சல் மூலமாக)

நகல்–

1. சென்னை – 6, பள்ளிக் கல்வி இயக்குநர் அவர்களுக்கு தகவலுக்காக பணிந்து அனுப்பப்படுகிறது.
2. தலைமையாசிரியர்கள் / முதல்வர்கள்
அனைத்து வகை பள்ளிகள்,
வேலூர் மாவட்டம். (சார்ந்த மாவட்டக் கல்வி அலுவலர் மூலமாக)